# IBM தனியுரிமை அறிக்கை

தஇந்தத் தனியுரிமை அறிக்கை 2025 ஆகஸ்ட் 26 அன்று நடைமுறையாகிறது

எங்களைத் தொடர்பு கொள்க →



## இந்தத் தனியுரிமை அறிக்கை புதுப்பிக்கப்பட்டது.

முன்னைய பதிப்புகள் →

# அறிமுகம்

IBM இல் நாம் உங்களது தனியுரிமையை மதிக்கவும் உங்களது தனிப்பட்ட தகவல்களைப் பொறுப்பாகப் பாதுகாக்கவும் முறைப்படுத்தவும் அர்ப்பணிப்பாயுள்ளோம்.

இந்தத் தனியுரிமை அறிக்கை எமது வாடிக்கையாளர்கள், வணிகக் கூட்டாளிகள், வழங்குநர்கள், IBM வணிக உறவைக் கொண்டிருக்கும் அல்லது எண்ணும் வேறு நிறுவனங்களிலுள்ள நுகர்வோரையும் வேறு தனியாட்களையும் பற்றிய தனிப்பட்ட தகவல்களை IBM சேகரிக்கவும் பயன்படுத்தவும் பகிரவும் செய்யும் முறையை விவரிக்கிறது. இது IBM ஐக் குறிப்பிடாமல் அதன் சொந்தக் கூற்றை முன் வைக்கும் ஒரு துணை நிறுவனம் தவிர IBM நிறுவனத்துக்கும் IBM துணை நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

நாம் ஒரு சேவை பெறுநருக்கு ஒரு வணிகத்திலிருந்து வணிகத்துக்கான வழங்குநர் என்ற வகையில் தயாரிப்புகளை, சேவைகளை, அல்லது செயலிகளை வழங்குமிடத்து, சேவை பெறுநர் அத்தயாரிப்புககளை, சேவைகளை அல்லது செயலிகளைப் பயன்படுத்தும்போது தனிப்பட்ட தகவல்களின் சேகரிப்புக்கும் பயன்பாட்டுக்கும் பொறுப்பாகிறார். இச்சேகரிப்பும் பயன்பாடும் வேறு விதமாக விவரிக்கப்பட்டாலன்றி சேவை பெறுநரின் தனியுரிமைக் கொள்கையில் உள்ளடக்கப்படுகிறது. சேவை பெறுநருடனான எங்களது ஒப்பந்தம் ஒப்பந்த மேலாண்மைக் காரணங்களுக்காக அத்தயாரிப்புகளின், சேவைகளின் அல்லது செயலிகளின் அங்கீகரிக்கப்பட்ட பயனர்களைப் பற்றிய தகவலைக் கோரவும் சேகரிக்கவும் அனுமதிக்கலாம். இச்சந்தர்ப்பத்தில், இந்தத்

தனியுரிமை அறிக்கை அல்லது கூடுதல் தனியுரிமை அறிவித்தல் பொருந்தும்.

நாம் ஒரு கூடுதல் தனியுரிமை அறிவிப்பைப் பயன்படுத்தி மேலதிகத் தரவு தனியுரிமைத் தரவுகளை வழங்கலாம்.

---

# நாங்கள் சேகரித்துப் பயன்படுத்தும் தனிப்பட்ட தகவல்கள்

இப்பகுதி நாங்கள் சேகரிக்கும் பல்வேறு வகையான தகவல்களையும் நாங்கள் அவற்றைப் பயன்படுத்தும் முறையையும் விவரிக்கிறது.

இதில் உங்களது கணக்கு, IBM வலைத்தளங்கள், IBM செயலிகள், கிளவுட், இணையவழிச் சேவைகள், சந்தைப்படுத்தல், ஒப்பந்த உறவுகள், உதவிச் சேவைகள்,, உங்களையும் IBM ஐயும் பாதுகாத்தல்,, IBM அமைவிடங்கள்,, ஆட்சேர்ப்பும் முன்னாள் ஊழியர்களும்,, எமது வணிக நடவடிக்கைகள மேற்கொள்ளல், நினைவிகளும் ஒத்த தொழில் நுட்பங்களும்,, சிறுவர்கள் தொடர்பான தகவல்களும் அடங்குகின்றன.

நாம் சேகரித்துப் பயன்படுத்தும் தகவல்களில் சுயவிபரத் தகவல்கள், இணையப் பக்கங்களில் ஊடாட்டங்கள், சந்தைப்படுத்தல் விருப்பங்கள், தீங்கிழைக்கும் செயல்களை விசாரிப்பதற்கான தகவல்கள், ஆதரவு நோக்கங்களுக்காக நீங்கள் எங்களுடன் உரையாடியவற்றின் பதிவுகள் அல்லது வரிவடிவங்கள், எங்களது வணிக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான தகவல்கள் மற்றும் வேறு பலவற்றை உள்ளடக்கியிருக்கலாம்.

---

## உங்களது கணக்கு

ஒரு IBMid-ஐ உருவாக்குவதன் மூலம் நீங்கள் IBM-உடன் ஓர் கணக்கை உருவாக்கலாம். IBMid ஆனது உங்கள் பெயர், மின்னஞ்சல் முகவரி, அஞ்சல் முகவரி மற்றும் நீங்கள் வழங்குகின்ற தொடர்புடைய தகவல்களுடன் IBM-ஐ வழங்குகின்றது. நாங்கள் IBM செயலிகளின், கிளவுட் அல்லது இணையவழிச் சேவைகளின் பயன்பாடு போன்ற சிற்சில சேவைகளுக்காக ஒரு IBMid ஐ வேண்டலாம்.

நீங்கள் எங்களுக்கு வழங்கும் வணிகத் தொடர்புத் தகவல்களில் அல்லது உங்கள் நிறுவனத்திடமிருந்து, எங்களது வணிகக் கூட்டாளிகளிடம், அல்லது எமது வழங்குநர்களிடமிருந்து நாங்கள் சேகரிக்கும் உங்களது விபரங்களையும் நாங்கள் சேமிக்கலாம்.

மேலும் அறிக

ஒரு IBMid நீங்கள் எங்களது வலைத்தளங்களை அணுகும்போது, ஒரு வேண்டுகோளை அல்லது வேண்டலைச் செய்யும்போது, அல்லது ஒரு தயாரிப்பை அல்லது சேவையைப் பயன்படுத்தும்போதுஉங்களைத் தனித்துவமாக அடையாளங் காண்கிறது. நீங்கள் ஒரு IBMid மூலம் எங்களது வலைத்தளங்களில் நுழைவைப் பதிந்தால், நாங்கள் சேகரிக்கும் தகவல்களை உங்களது கணக்குடன் தொடுக்கலாம். ஒரு IBMid உங்களுக்கு IBM செயலிகள், கிளவுட், இணையவழிகச் சேவைகள் ஆகியவற்றுக்கான அணுகலை வழங்கவும் பயன்படுத்தப்படுவதுடன் உங்களது ஒப்பந்த, பில்லிங் வரலாற்றை மேலாண்மை செய்ய அனுமதிக்கிறது. உங்களது IBMid யிலுள்ள மின்னஞ்சல் முகவரி நீங்கள் சந்தாதாரராகும்

எச்சேவை தொடர்பாகவும் உங்களைத் தொடர்புகொள்ளப் பயன்படுத்தப்படலாம்.

வணிகத் தொடர்புத் தகவல்கள் என்றால் பொதுவாக ஒரு வணிக அட்டையில் நீங்கள் காணும் பெயரும் வணிகத் தொடர்பு விபரங்களும் ஆகும். நாங்கள் வணிக விடயங்கள் குறித்து உங்களைத் தொடர்புகொள்ள அல்லது தொடர்பாடல் செய்ய இத்தகவல்களைப் பயன்படுத்துகிறோம். நாங்கள் IBM வணிகக் கூட்டாளி அல்லது வழங்குநர் போன்ற ஒரு மூன்றாம் தரப்பிடமிருந்து வணிகத் தொடர்புத் தகவல்களைப் பெற்றால், அத்தகவல்கள் சரியான முறையில் பகிரப்பட்டதை நாங்கள் உறுதிப்படுத்துவோம்.

நாங்கள் உங்களது தொழில்முறைக் கல்வி, திறன்கள், வேலை அனுபவம் அல்லது வணிகம் தொடர்பான வலைப்பதிவுகள், வெளியீடுகள், வேலைப் பாத்திரங்கள், சான்றிதழ்கள் போன்ற பொதுவில் கிடைக்கும் தகவல்கள் போன்ற வேறு வணிகத் தொடர்புடைய தகவல்களுடன் உங்களது வணிகத் தொடர்புத் தகவல்களையும் இணைக்கலாம். விற்பனைச் செயற்பாட்டில், உங்களுடன் உறவைப் பேண, ஒப்பந்தத்துக்குப் பின்னரான உறவுகள் என்பன போன்ற IBM இன் வணிகத்தின் எப்பகுதியிலும் உங்களுடன் தொடர்பு கொள்ள இத்தகவல்கள் பயன்படுத்தப்படலாம்.

உங்களுடைய கணக்கு நீங்கள் பணியமர்த்தப்பட்டுள்ள, ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள அல்லது தொண்டூழியம் செய்கின்ற நிறுவனத்திற்குச் சொந்தமான ஒரு டொமைனைக் கொண்டுள்ள ஒரு மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருந்தால், உங்கள் நிறுவனம்:

- உங்கள் கணக்கின் நிலை பற்றி விசாரிக்க முடியும்,
- உங்கள் கணக்கு அமைப்புகளைக் கோர முடியும் (உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் உட்பட), மற்றும்,
- தனது விருப்பத்தின்படி, அதை ஒரு நிறுவன ID–க்கு மாற்ற முடியும்.

உங்கள் கணக்கு ஒரு நிறுவன ID–யாக உருவாக்கப்பட்டிருந்தால் அல்லது மாற்றப்பட்டிருந்தால், உங்கள் நிறுவனம் உங்கள் கணக்கின் தகவல்களை நிர்வகிக்கின்றது. மேலும் அது உங்கள் ID–க்கான அங்கீகரிக்கும் முகமையாகச் செயல்படுகின்றது, அதாவது உங்கள் அணுகல் உங்கள் நிறுவனத்தின் உள்நுழைவுச் சேவையால் கட்டுப்படுத்தப்படுகின்றது.

உங்கள் IBMid ஒரு நிறுவனக் கூட்டமைப்புப் பங்காளி (அடையாளம் வழங்குபவர்) மூலம் உருவாக்கப்பட்டிருந்தால், அடையாளம் வழங்கும் பங்காளியிடம் இருந்து அடிப்படையான தனிப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்பட்டு அவை IBM உடன் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன.

**IBM வலைத்தளங்கள்**

எமது வலைத்தளங்கள் உங்களுக்கு எங்களையும் எமது தயாரிப்புகளையும் சேவைகளையும் பற்றித் தொடர்பு கொள்வதற்கான வழிகளை வழங்குகின்றன. நாங்கள் வலைத்தளங்களிற் சேகரிக்கும் தகவல்கள் உங்களுக்கு வலைத்தளத்துக்கான அணுகலை வழங்கவும், வலைத்தளத்தை இயக்கவும், உங்களது அனுபவத்தை மேம்படுத்தவும், உங்களுக்குத் தகவல்கள் வழங்கப்படும் விதத்தைத் தனிப்பயனாக்கவும் பயன்படுத்தப்படுகிறது. நீங்கள் ஒரு கணக்குடன் நுழைவுப் பதிவின்றி எங்களது வலைத்தளங்களைப் பார்வையிட்டால், நாங்கள் அப்போதும் உங்களது வலைத்தள வருகையுடன் தொடர்புள்ள தகவல்களைச் சேகரிக்கலாம்.

நாங்கள் வலைத்தளத் தகவல்களைச் சேகரிக்கவும் உங்களது விருப்பங்களை அமைக்கவும் பயன்படுத்தும் தொழில்நுட்பங்களைப் பற்றி மேலும் தகவல்களுக்காக, நினைவிகளும் ஒத்த தொழில்நுட்பங்களும் என்பதைப் பார்க்க.

மேலும் அறிக

### IBM செயலிகள், கிளவுட், இணையவழிச் சேவைகள்

எமது கிளவுட், இணையவழிச் சேவைகளில் "ஒரு சேவையாக" என்பதும் மேசைக் கணினிச் செயலிகள், கைப்பேசிச் செயலிகள் (அல்லது செயலிகள்), IBM கற்றல் சேவைகள் என்பனவும் அடங்குகின்றன. நாங்கள் எங்களது சேவைகளை மேம்படுத்தவும் விருத்தி செய்யவும்தொழில்நுட்ப, சந்தை நுண்ணறிவுகளை உருவாக்கவும் நீங்கள் பார்க்கும் பக்கங்கள் அல்லது அப்பக்கத்தில் உங்களது தொடர்புகள் போன்ற இச்சேவைகளின் பயன்பாடு பற்றிய தகவல்களைச் சேகரிக்கிறோம். நாங்கள் எங்களது கிளவுட், இணையவழிச் சேவைகளைப் பயன்படுத்த ஒரு IBMid ஐத் தேவையாக்கலாம் (உங்கள் கணக்கு என்பதைப் பார்க்க).

மேலும் அறிக

மேலும் அறிக நாங்கள் எங்களது கிளவுட், இணையவழிச் சேவைகளிற் சேகரிக்கும் தகவல்களில் அடங்கக் கூடியன:

- நீங்கள் பார்க்கும் வலைப்பக்கங்கள்,
- சேவையினுள் உள்ள உங்களது அமைப்புகள்,
- உங்களது உலவியின் வகையும் IP முகவரியும்,
- இயங்கு தளம், சாதன வகை, வாசகத் தகவல்கள்,
- தகர்வுப் பதிவுகள்,
- IBMid தகவல்கள் (நுழைவுப் பதிந்திருந்தால்),
- கடவுச்சொற்கள்.

இத்தகவல்கள் உங்களுக்கு அணுகலை வழங்கவும் சேவையை இயக்கவும் ஆதரவுக்காகவும் சேவையின் அனுபவத்தைத் தனிப்பயனாக்கவும் மேம்படுத்தவும், வேறு சேவைகளையும் தொழில்நுட்பங்களையும் விருத்தி செய்யவும், தொழில்நுட்ப, சந்தை நுண்ணறிவுகளை உருவாக்கவும் சேகரிக்கப்படுகின்றன. நாங்கள் வலைத்தளத் தகவல்களைச் சேகரிக்கவும் உங்களது விருப்பங்களை அமைக்கவும் பயன்படுத்தும் தொழில்நுட்பங்களைப் பற்றி மேலும் தகவல்களுக்காக, [நினைவிகளும் ஒத்த தொழில்நுட்பங்களும்](#) என்பதைப் பார்க்க.

ஒரு பகிரங்க கிளவுட் வழங்குநர் என்ற வகையில், IBM வெளிப்படையான அனுமதியின்றி சந்தைப்படுத்தல், விளம்பர நோக்கங்களுக்காக ஓர் ஒப்பந்தத்தின் கீழ் முறைப்படுத்தப்படும் தனிப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துவதில்லை.

கைப்பேசிச் செயலியானது தனிப்பட்ட அறிவித்தல்கள், புவி இருப்பிடத் தகவல்கள் அல்லது ஒரு சாதனத்தின் தனித்துவமான பயனர் அடையாளம் போன்ற செயலியாற் சேகரிக்கப்படும் தகவல்களைப் பற்றிய விபரங்களை வழங்கலாம். தனித்துவமான பயனர் அடையாளங்கள் சேவையகங்களுடன் இணைக்கவும் செயலிகளுடன் சாதனத்தின் பயன்பாட்டை இணைக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. செயலியின் தொழிற்பாடுகளைப் பொறுத்து, நீங்கள் அமைப்புகள் பொருட்பட்டியைப் பயன்படுத்தி அல்லது உங்கள் பயனர் சுயவிபரத்தைப் பயன்படுத்தி உங்கள் தனியுரிமை அமைப்புகளை வடிவமைக்கலாம்.

IBM Learning கல்விச் சேவைகளை வழங்குவதுடன் தேவைப்படும்போது உங்களுக்கு நற்சான்றுகளை, சான்றிதழ்களை அல்லது மேலும் தகவல்களை வழங்கப் பாடநெறி முடியும்போது தகவல்களைச் சேகரிக்கிறது.

நாங்கள் மூன்றாம் தரப்பு வலைத்தளங்களில் அல்லது செயலிகளில் வழங்கப்படும்

டக்கத்துக்கு அல்லது தனியுரிமை
றைகளுக்குப் பொறுப்பேற்க மாட்டோம்.

## சந்தைப்படுத்தல்

உங்களது விருப்பங்களுக்கு உட்பட்டு, நாங்கள் தொடர்புடைய தயாரிப்புகளையும் சேவைகளையும் சலுகைகளையும் பற்றி உங்களுடன் தொடர்பாடல் செய்ய நாங்கள் சேகரிக்கும் தகவல்களைப் பயன்படுத்துகிறோம். எங்களது உள்ளடக்கமும் விளம்பரங்களும் தொடர்பில் உமது இணையவழி அனுபவத்தைத் தனிப்பயனாக்கவும் அகச் தைப்படுத்தல், வணிக நுண்ணறிவு என்பவற்றை விருத்தி செய்யவும் இத்தகவல்களைப் பயன்படுத்துகிறோம். மின்னஞ்சல், தொலைபேசி, அல்லது அஞ்சல் மூலம் சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் தொடர்பான உங்களது விருப்பங்களை அமைக்க அல்லது புதுப்பிக்க, IBM Privacy Preference Center-க்குச் செல்க. நீங்கள் ஒவ்வொரு சந்தைப்படுத்தல் மின்னஞ்சலுக்குக் கீழே ஒரு விலகல் கோரிக்கையைச், சமர்ப்பிக்கலாம் அல்லது **சந்தா விலக்கம்** தெரிவு செய்யலாம். எங்களது வலைத்தளங்களில் இணையவழியில் உங்களைப் பற்றி சேகரிக்கும் தகவல்களை மீளாய்வு செய்ய அல்லது உங்களது விருப்பங்களை அமைக்க, வலைத்தள அடியில் **நினைவி விருப்பங்கள்** என்பதைத் தெரிவு செய்க.

மேலும் அறிக

நாங்கள் சேகரிக்கும் தகவல்களை நாங்கள் சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகிறோம். இதில் அடங்கக்கூடிய தகவல்களாவன:

- நிகழ்வுகளில் கலந்து கொள்வது அல்லது இணையவழிப் படிவங்களைச் சமர்ப்பிப்பது போன்ற IBM உடனான உங்களது ஊடாட்டங்களின் மூலம் உம்மிடமிருந்து நேரடியாகச் சேகரிக்கப்படுபவை,

- மூன்றாம் தரப்பினர் தகவல்களைச் சட்டப்படி பெற்றுள்ளதை உறுதிப்படுத்தும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருப்பதுடன், எங்களது சந்தைப்படுத்தல் தொடர்பாடல்களிற் பயன்படுத்த IBM க்குத் தகவல்களை வழங்க உரிமையுள்ளனவுமான மூன்றாம் தரப்புத் தரவு வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்டவை,
- மூன்றாம் தரப்பினர் [இணையதளங்கள்](#) உட்பட எங்கள் இணையதளங்களில் சேகரிக்கப்பட்டவை அல்லது IBM மின்னஞ்சல்கள் மற்றும் உள்ளடக்கத்துடன் உங்கள் இடைவினைகள். இந்தத் தகவல்களைச் சேகரிக்க நாங்கள் பயன்படுத்தும் தொழில்நுட்பம் குறித்த கூடுதல் தகவல்களுக்கு, காண்க நினைவிகள் [மற்றும் ஒத்த தொழில்நுட்பங்கள்](#).

உங்களது விருப்பங்களுக்கு உட்பட்டு, நாம் IBM தயாரிப்புகளும் சேவைகளும் சலுகைகளும் தொடர்பாக உமக்குச் சந்தைப்படுத்த இத்தகவல்களைப் பயன்படுத்தலாம். எடுத்துக் காட்டாக, நாங்கள் செய்யக்கூடியன:

- மின்னஞ்சல், தொலைபேசி அல்லது அஞ்சல் மூலம் உங்களைத் தொடர்பு கொள்ளல்
- மிகவும் பொருத்தமான உள்ளடக்கத்தைப் பகிர்வது அல்லது எங்களது வலைத்தளங்களில் படிவங்களை முன்னிரப்புவது போன்ற IBM தயாரிப்புகளுனதும் சேவைகளுடனுமான உமது அனுபவத்தைத் தனிப்பயனாக்குதல்.
- நாம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினர் IBM வலைத்தளங்களுடனான உங்களது ஊடாட்டங்கள், எங்களதுஉள்ளடக்கம், மின்னஞ்சல்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட புவியடங்களில் உமது ஹாஷ் மின்னஞ்சல் முகவரியுடன் இணைந்த செயற்பாடு தொடர்பான தகவல்களின் அடிப்படையில் மூன்றாம் தரப்பு வலைத்தளங்களில் இலக்கு வைக்கப்பட்ட IBM விளம்பரங்களை வழங்குதல்.

உங்களதுமின்னஞ்சல் முகவரியை, தொலைபேசியை அல்லது அஞ்சல் முகவரியைப் பயன்படுத்தும்

சந்தைப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான உங்களது விருப்பங்களை அமைக்க அல்லது புதுப்பிக்க IBM Privacy Preference Center-க்குச் செல்க. நீங்கள் ஒவ்வொரு சந்தைப்படுத்தல் மின்னஞ்சலினதும் கீழே ஒரு விலகல் கோரிக்கையைச், சமர்ப்பிக்கவும் அல்லது **சந்தா நீங்கத்** தெரிவு செய்யவும் செய்யலாம். தனிப்பயனாக்கத்துக்காக அல்லது இலக்கு வைக்கும் விளம்பரத்துக்காக உங்களது ஹாஷ் மின்னஞ்சலைப் பயன்படுத்துவதை விட்டு விலக, நீங்கள் இத்தெரிவுகளில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தி உங்களது மின்னஞ்சல் இசைவை விலக்கிக் கொள்ளலாம்.

நாங்கள் எங்கள் வலைத்தளங்களில் இணையவழியில் உங்களைப் பற்றிச் சேகரிக்கும் தகவல்களை மீளாய்வு செய்ய அல்லது உங்கள் விருப்பங்களை அமைக்க, வலைத்தள அடியில் **நினைவி விருப்பங்கள்** என்பதைத் தெரிவு செய்க.

நாங்கள் எங்கள் வணிக நடவடிக்கைகளுக்கு அத்தியாவசியமான சந்தைப்படுத்தல், வணிக நுண்ணறிவை விருத்தி செய்யவும் இத்தகவல்களைப் பயன்படுத்துகிறோம். எடுத்துக் காட்டாக, நாங்கள் செய்யக்கூடியன:

- உங்கள் ஆர்வங்களையும் சாத்தியமான வணிகத் தேவைகளையும் நன்கு விளங்கிக் கொள்ள, நாங்கள் சேகரிக்கும் தகவலை ஒன்றிணைத்தல்,
- எங்கள் சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களினதும் நிகழ்வுகளினதும் பயனுறலை அளவிடவும் வணிகத் தீர்மானங்களையும் முதலீடுகளையும் பற்றிய தகவல்களுக்குச் செல்லவும் ஒன்றிணைந்த தரவுகளைப் பயன்படுத்துதல்,
- சந்தைப்படுத்தல் பார்வையாளர்களை உருவாக்கவும் மாதிரியமைக்கவுமான நோக்கங்களுக்காக IBM வலைத்தளப் பார்வையாளர்களைப் பற்றிச் சேகரிக்கப்படும் தகவல்களை ஒன்றிணைத்தல்.

### ஒப்பந்த உறவுகள்

நீங்கள் எங்களிடமிருந்து ஒரு சோதனையை, அல்லது ஒரு தயாரிப்பை அல்லது சேவையை வேண்டும் போது ஓர் ஒப்பந்த உறவு ஏற்படுகிறது. நாங்கள் பிரதானமாக வணிகங்களுக்கு எங்கள் தயாரிப்புகளையும் சேவைகளையும் வழங்குகின்ற அதே வேளை, தனியாட்களும் நேரடியாக

ஒரு சேவை பெறுநர் என்ற வகையில் எங்களுடன் ஓர் ஒப்பந்தத்தில் நுழையலாம். நாங்கள் ஒப்பந்த உடன்படிக்கைக்குத் தயாராகவும், நுழையவும், நிறைவேற்றவும் நியாயமான முறையில் தேவையான எத்தகவலையும் சேகரிக்கலாம்.

மேலும் அறிக

ஓர் ஒப்பந்த உறவிற் சேகரிக்கப்படும் தகவல்களில் கோரிக்கையாளரின் வணிகத் தொடர்புத் தகவல்கள், ஒரு IBMid, வேண்டல் விபரங்கள் என்பன அடங்கலாம். அனுப்பவும் கொடுப்பனவுக்கும், சேவைகளை நடைமுறைப்படுத்த, அல்லது தயாரிப்புக்கு அல்லது சேவைக்கு அணுகலை வழங்கத் தேவையான தகவல்களும் சேகரிக்கப்படலாம்.

தயாரிப்புகளின் அல்லது சேவைகளின் தன்மையைப் பொறுத்து ஒப்பந்த முகாமைத்துவத்துக்கும் கீழ்ப்படிதலுக்குமாக, ஆதரவை வழங்க, எங்கள் தயாரிப்புகளையும் சேவைகளையும் மேம்படுத்த அல்லது விருத்தி செய்ய, வாடிக்கையாளர் திருப்திக் கருத்துக் கணிப்புகளுக்காக உங்களைத் தொடர்பு கொள்ள, தொழில்நுட்ப, சந்தை நுண்ணறிவுகளை உருவாக்க என்பன போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக இத்தகவல்கள் சேகரிக்கப்படலாம். மேலும் தகவல்களுக்காக, IBM செயலிகள், கிளவுட், இணையவழிச் சேவைகள் என்பதைப் பார்க்க.

ஓர் ஒப்பந்த உறவில் சேகரிக்கப்படும் தகவல்கள் முறைப்படுத்த முன்னர் இசைவு பெறப்படாமல் சந்தைப்படுத்தல், விளம்பர நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதில்லை.



## ஆதரவுச் சேவைகள்

நீங்கள் ஆதரவு கோர எங்களைத் தொடர்பு கொள்ளும் போது, நாங்கள் உங்களின் தொடர்புத் தகவல்கள், சிக்கல் விளக்கம், சாத்தியமான தீர்வுகள் என்பவற்றைச் சேகரிக்கிறோம். நாங்கள் வழங்கப்படும் தகவல்களை ஆதரவு வினவலைக் கையாளவும் நிர்வாக நோக்கங்களுக்காகவும் உங்களுடன் எங்கள் உறவை வளர்க்கவும் ஊழியர்களுக்கான பயிற்சிக்காகவும் தர உத்தரவாத நோக்கங்களுக்காகவும் பதிவு செய்கிறோம்.

மேலும் அறிக

LiveChat இனூடாக உட்பட நீங்கள் ஆதரவு கோர எங்களைத் தொடர்பு கொள்ளும் போது, நாங்கள் உங்கள் தொடர்புத் தகவல்கள், சிக்கல் விளக்கம், சாத்தியமான தீர்வுகள் என்பவற்றைச் சேகரிக்கிறோம். இதில் எங்களுடனான உங்கள் உரையாடல்களின் பதிவு அல்லது வரிவடிவம் அடங்கலாம். நாம் உமக்கு உமது ஆதரவுக் கோரிக்கையுடன் தொடர்பான தயாரிப்புகளை அல்லது சேவைகளைப் பற்றித் தெரிவிக்க இத்தகவல்களைப் பயன்படுத்தலாம். இதில் தயாரிப்புப் புதுப்பிப்புகள் அல்லது திருத்தங்கள் அடங்கலாம், அத்துடன் நாங்கள் சிக்கல் தொடர்பாக ஏதாவது கிடைக்கப் பெறும் பயிற்சி போன்ற தயாரிப்பு ஆதரவை வழங்குவதுடன் தொடர்பாக மிகப் பெறுமதியான யோசனைகளை வழங்க உங்களுடனான அல்லது உங்கள் நிறுவனத்துடனான வேறு தொடர்புகளின் மூலம் சேகரிக்கப்படும் தகவல்களை ஒன்றிணைக்கலாம்.

நாங்கள் ஆதரவு நிகழ்வைக் கையாளும் போது, நீங்கள் வழங்கிய தகவல்களுக்கு அல்லது உங்களது கணினியிலுள்ள தகவல்களுக்கு எங்களின் தற்செயலான அணுகல் இருக்கலாம். இத்தகவல்களில் நீங்கள், உங்கள் நிறுவனத்தின் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் அல்லது ஏனைய தொடர்புள்ள தரப்பினர் தொடர்பான தகவல்கள் இருக்கலாம். இத்தகவல்களைக் கையாள்வதும் முறைப்படுத்துவதும் தொடர்பான நிபந்தனைகள் பொருந்தக்கூடிய பயன்பாட்டு விதிமுறைகளில் அல்லது கண்டறியும் தரவைப் பரிமாறிக்கொள்வதற்கான பயன்பாட்டு விதிமுறைகள் போன்ற உங்கள் நிறுவனத்துக்கும் IBM இற்குமிடையிலான வேறு ஒப்பந்தங்களில் உள்ளடங்குகின்றன.

## உங்களையும் IBM ஐயும் பாதுகாத்தல்

நாங்கள் தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களிலிருந்து உங்களையும் IBM ஐயும் பாதுகாக்கவும் நாங்கள் வைத்திருக்கும் தகவல்களை அங்கீகரிக்கப்படாத அணுகலை, வெளிப்படுத்துதலை, மாற்றுதலை அல்லது அழித்தலை விட்டும் பாதுகாக்கவும் தகவல்களைச் சேகரித்துப் பயன்படுத்தலாம். இதில் நுழைவுப் பதிவுத் தகவல்கள் போன்ற எங்கள் தகவல் தொழில்நுட்ப அணுகல் அங்கீகார அமைப்புகளின் தகவல்கள் அடங்குகின்றன.

மேலும் அறிக

நாங்கள் உங்கள் தகவல்களையும், எங்களது உட்கட்டமைப்பையும் எங்களது வலையமைப்புகளையும் பாதுகாக்கப் பயன்படுத்தும் பாதுகாப்புத் தீர்வுகள் IP முகவரிகளும் பதிவுக் கோப்புகளும் போன்ற

தகவல்களைச் சேகரிக்கலாம். இது எந்தவொரு சாத்தியமான பாதுகாப்பு நிகழ்வையும் விசாரிக்கவும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பான நுண்ணறிவுகளை உருவாக்கவும் இயலுமாக்கப் பாதுகாப்புத் திட்டங்களின் தொழிற்பாட்டுக்கும் பயன்பாட்டுக்கும் தேவையானது.

நாங்கள் அங்கீகரிக்கப்படாத அணுகல், வைரஸ்கள், தீங்கிழைக்கும் செயல்களின் அறிகுறிகள் என்பவற்றைக் கண்டறிய தகவல் தொழில்நுட்பத் தொகுதிகளுக்கும் வலையமைப்புகளுக்குமானவையும் அவற்றிலுள்ளவையுமான அணுகல் புள்ளிகளில் தகவல்களைச் சேகரிக்க சிறப்புக் கருவிகளையும் வேறு தொழில்நுட்ப வழிமுறைகளையும் பயன்படுத்தலாம். நாங்கள் சேகரிக்கும் தகவல்கள் அங்கீகரிக்கப்படாத அணுகல், தீம்பொருள் அல்லது தீங்கிழைக்கும் செயற்பாடுகள் இருப்பதாகச் சந்தேகப்படும் போது விசாரணைகளை நடத்தவும், தீங்கிழைக்கும் குறியீட்டை அல்லது உள்ளடக்கத்தை அகற்றவும் அல்லது தனிமைப்படுத்தவும் பயன்படுத்தப்படலாம்.

## IBM அமைவிடங்கள்

நீங்கள் ஒரு IBM அமைவிடத்துக்கு வருகை தரும் போது, நாங்கள் உங்களது பெயரை அல்லது வணிகத் தொடர்புத் தகவல்களை, (உங்களது கணக்கு என்பதைப் பார்க்க), அத்துடன் சில சந்தர்ப்பங்களில், அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஓர் அடையாள அட்டையிலிருந்து தகவல்களைச் சேகரிப்போம். இத்தகவல்கள் அணுகல் முகாமைத்துவத்துக்காகவும்,

எங்களது அமைவிடங்களினதும் பணியாளர்களினதும் பாதுகாப்புக்கும் காப்பளிப்புக்குமாகவும் சேகரிக்கப்படுகின்றன.

மேலும் அறிக

எங்களது அமைவிடங்களில் சேகரிக்கப்படும் தகவல்கள் அணுகல் அணிவில்லைகளை வழங்கப் பயன்படுத்தப்படுகின்றன. சட்டப்படி அனுமதிக்கப்படுமிடத்து, நாங்கள் வருகை தருவோரின் ஆளடையாளத்தைச் சரிபார்க்கலாம், அத்துடன் தளத்தில் பணியாற்றும் வழங்குநர் பணியாளர்களுக்காக, அடையாளங் காணல் நோக்கங்களுக்காக ஓர் ஒளிப்படத்துடன் கூடிய அணிவில்லை கோரப்படலாம்.

எங்களது அமைவிடங்களினதும் பணியாளர்களினதும் சொத்துக்களினதும் பாதுகாப்பு, காரப்பளிப்புக் காரணங்களுக்காகப் படக்கருவி மேற்பார்வையும் அணுகல் முகாமைத்துவும் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் தகவல்கள் IBM அமைவிடத்தில் கிடைக்கப் பெறலாம்.

## ஆட்சேர்ப்பும் முன்னாள் பணியாளர்களும்

நாங்கள் எங்களது நிறுவனத்துக்கான புதிய திறமைகளைத் தொடர்ச்சியாகத் தேடி வருகிறோம், நாங்கள் பல மூலங்களிலிருந்து வேலை விண்ணப்பதாரிகளை அல்லது வருங்கால

விண்ணப்பதாரிகளைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கிறோம். மேலும் தகவல்களுக்காக விண்ணப்பதாரிகள் [Talent Acquisition Privacy Notice-க்கு](#) அனுப்பப்படுகிறார்கள். ஓர் ஊழியர் IBM ஐ விட்டு வெளியேறும் போது, நாங்கள் IBM ஆல் கையாளப்படும் அளவுக்கான ஓய்வூதியங்களின் முகாமைத்துவம் உட்பட ஏதாவது மீதமுள்ள வணிகம், ஒப்பந்தம், தொழில், சட்ட, நிதி நோக்கங்களுக்காக அவருடன் தொடர்புள்ள தகவல்களை முறைப்படுத்துவதைத் தொடர்கிறோம்.

மேலும் அறிக

ஆட்சேர்ப்பைப் பொறுத்த வரை, நாங்கள் ஆட்சேர்ப்பு இடைத்தரகர்களின் உதவியுடன் வருங்கால விண்ணப்பதாரிகளைத் தேடவும் ஒரு குறிப்பிட்ட தொழிற்பாட்டுக்கான வருங்கால விண்ணப்பதாரிகளை அடையாளங் காணச் சமூக ஊடகத் தளங்களிற் பொதுவிற் கிடைக்கும் தகவல்களைப் பயன்படுத்தலாம்.

ஓர் ஊழியர் IBM ஐ விட்டு வெளியேறும் போது, நாங்கள் முன்னாள் ஊழியரிடமிருந்து IBM இல் அவரது தொழிலைப் பற்றிய அடிப்படைத் தகவல்களைத் தக்க வைக்கிறோம்.

ஓர் ஊழியர் ஓய்வு பெற்ற பிறகு, நாங்கள் ஓய்வூதியம் பெறுபவருக்கான ஓய்வூதியக் கடமைகளை நிறைவேற்ற ஓய்வூதிகாரரைப் பற்றிய தகவல்களை முறைப்படுத்துகிறோம். ஓய்வூதியத் தகவல்களை முறைப்படுத்துவதை அல்லது வேறு ஓய்வூதியத் திட்டங்களைப் பற்றிய தகவல்களை ஓய்வூதியங்களுக்குப் பொறுப்பான உள்ளூர் அமைப்பிடம் காணலாம். சில நாடுகளில், இது ஒரு சுயாதீன அமைப்பாக இருக்கலாம். சில சந்தர்ப்பங்களில், ஓய்வு பெற்றவர்கள் IBM இனால் ஏற்பாடு செய்யப்பட்ட முன்முயற்சிகளில் அல்லது தொண்டு, சமூகப் பொறுப்புத் திட்டங்கள் போன்ற திட்டங்களில் இன்னமும் கலந்து கொள்ளலாம்.

அத்தகைய கலந்து கொள்ளல் தன்விருப்பிலானது, அந்த முயற்சிகளுடன் தொடர்புள்ள வலைத்தளங்களில் அல்லது தகவல் பக்கங்களில் மேலும் தகவல்கள் வழங்கப்படுகின்றன.

## எங்கள் வணிக நடவடிக்கைகளை நடத்துதல்

நாங்கள் எங்களது வணிக நடவடிக்கைகளையும் தொகுதிகளையும் செயன்முறைகளையும் மேம்படுத்தத் தகவல்களைச் சேகரித்துப் பயன்படுத்துகிறோம். எடுத்துக் காட்டாக, எங்கள் நடவடிக்கைகளை நடத்தவும், பராமரிக்கவும், கணக்காய்வு செய்யவும் உகப்பாக்கவும், எங்களது சொத்துக்களையும் பணியாளர்களையும் பாதுகாக்கவும், தயாரிப்பு விருத்திக்காகவும், எங்கள் உரிமைகளைத் தற்காக்கவும் தகவல்கள் பயன்படுத்தப்படலாம்.

மேலும் அறிக

நாங்கள் நிறுவனத்தையும் வணிகத்தையும் பற்றிய தகவலறிந்த தீர்மானங்களை மேற்கொள்ளவும் வினைத்திறனும் கணக்காய்வும் போக்குகளும் தொடர்பாக அறிக்கையிடவும் எங்களது வணிக நடவடிக்கைகளைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கிறோம். எடுத்துக் காட்டாக, நாங்கள் எங்கள் நடவடிக்கைகளின் செலவுகளையும் தரத்தையும் பகுப்பாய்வு செய்ய இத்தகவல்களைப் பயன்படுத்துகிறோம். முடியுமானவிடத்து, இது ஒருங்கிணைக்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்திச் செய்யப்படுகிறது, ஆனால் தனிப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தலாம்.

நாம் இவற்றுக்காக எங்களது வணிகத் தொகுதிகளிலிருந்து தகவல்களைச் சேகரித்துப் பயன்படுத்துகிறோம், அதில் தனிப்பட்ட தகவல்கள் அடங்கலாம்:

- மோசடியை அல்லது ஏனைய குற்றச் செயல்களைக் கண்டறிவது உட்பட (எடுத்துக் காட்டாக, கட்டண முறைகளில் தகவல்களைப் பயன்படுத்துவதன் மூலம்) எங்கள் உரிமைகளைப் பாதுகாத்தலும் அல்லது செயற்படுத்துதலும்
- சச்சரவுகளைக் கையாளலும் தீர்த்தலும்
- முறைப்பாடுகளுக்குப் பதிலளித்தலும் சட்ட நடவடிக்கைகளில் IBM ஐத் தற்காகாத்தலும்
- நாங்கள் வணிகம் செய்யும் நாடுகளில் சட்டக் கடப்பாடுகளுக்கு இணங்குதல்

நாங்கள் எங்கள் வணிகச் செயன்முறைகளின், வலைத்தளங்களின், கிளவுட், இணையவழிச் சேவைகளின், தயாரிப்புகளின் அல்லது தொழில்நுட்பங்களின் பயன்பாட்டிலிருந்து தகவல்களைச் சேகரிக்கிறோம். இத்தகவல்களில் தனிப்பட்ட தகவல்கள் அடங்கலாம், அத்துடன் இவை தயாரிப்பு, செயன்முறை விருத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, நாம் செயற்றிறனை அதிகரிக்க, செலவுகளைக் குறைக்க அல்லது தன்னியக்கச் செயன்முறைகளையும் கருவிகளையும் ஆக்குவதன் மூலம் சேவைகளை மேம்படுத்த அல்லது இவற்றை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பங்களை மேம்படுத்த அல்லது விருத்தி செய்ய இத்தகவல்களைப் பயன்படுத்தலாம்.

## நினைவிகளும் ஒத்த தொழில்நுட்பங்களும்

நீங்கள் எங்கள் வலைத்தளங்களுக்கு, கிளவுட், இணையவழிச் சேவைகளுக்கு, மென்பொருள் தயாரிப்புகளுக்கு வருகை தரும் போது அல்லது சிற்சில மூன்றாந் தரப்பு வலைத்தளங்களில் எங்களது

உள்ளடக்கத்தைப் பார்க்கும் போது, நாம் நினைவிகள், வலைக் குறியொளிகள், அகச் சேமிப்பகம் அல்லது HTML5 போன்ற பல்வேறு இணையவழித் தடமறிதல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உங்கள் இணைப்பும் உங்கள் செயற்பாடும் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கிறோம். இத்தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திச் சேகரிக்கப்படும் தகவல்கள் வலைத்தளத்தை அல்லது சேவையை இயக்க, செயற்றிறனை மேம்படுத்த, எங்கள் இணையவழிச் சேவைகள் பயன்படுத்தப்படும் முறையை விளங்கிக் கொள்ள அல்லது எங்கள் பயனர்களின் நலன்களைத் தீர்மானிக்கத் தேவைப்படலாம். நாங்கள் IBM தளங்களிலும் வேறு தளங்களிலும் அத்தகைய தொழில்நுட்பங்களை வழங்கவும் அவற்றைப் பயன்படுத்துவதில் உதவவும் விளம்பரக் கூட்டாளிகளைப் பயன்படுத்துகிறோம்.

மேலும் அறிக

ஒரு நினைவி என்பது உங்கள் உலவிக்கு ஒரு வலைத்தளம் அனுப்பக்கூடிய தரவுகளின் ஒரு பகுதியாகும், அது உங்கள் கணினியில் சேமிக்கப்பட்டு உங்களது கணினியை அடையாளம் காணப் பயன்படுத்தப்படலாம். படப்புள்ளிகளும் குறிச்சொற்களும் உட்பட வலைக் குறியொளிகள் என்பவை ஒரு IBM வலைப் பக்கத்தைப் பார்வையிடும் பயனரைத் தடமறிய அல்லது ஒரு வலைப் பக்கம் மற்றொரு வலைத்தளத்துக்குப் படியெடுக்கப்பட்டுள்ளதா என்றறியப் பயன்படும் தொழில்நுட்பங்களாகும். அகப் பகிர்வுப் பொருட்கள் பார்வையிட்ட வலைப்பக்கத்தில் காட்டப்படும் உள்ளடக்கத் தகவல்களையும் விருப்பங்களையும் சேமிக்க முடியும். இத்தொழில்நுட்பங்கள் யாவும் (உங்களது நினைவி விருப்பங்களுக்கு உட்பட்டு) எங்கள் வலைத்தளங்கள் முழுவதும் இணைக்கப்பட்ட கூறுகளை வழங்க அல்லது உங்கள் ஆர்வங்களின் அடிப்படையில் வேறு வலைத்தளங்களில் இலக்கு வைக்கப்பட்ட IBM விளம்பரத்தைக் காட்டப் பயன்படுத்தப்படலாம். வலைக் குறியொளிகள்

மின்னஞ்சல் செய்திகளுடனான அல்லது செய்தி மடல்களுடனான உங்கள் ஊடாட்டத்தைத் தடமறியவும் பயன்படுத்தப்படலாம்.

நடப்பு அமர்வின் போது நீங்கள் ஏற்கனவே வழங்கிய தகவல்களை அல்லது ஒரு கொடுக்கல் வாங்கலை முடிக்கத் தேவையான தகவல்கள் உங்களிடம் கேட்கப்படாதிருக்க அமர்வு நினைவிகள் பக்கத்துக்குப் பக்கம் உங்கள் முன்னேற்றத்தைத் தடமறியப் பயன்படுத்தலாம். வலை உலவி மூடப்படும் போது அமர்வு நினைவிகள் அழிக்கப்படுகின்றன.

IBM வழங்கும் தொடர்ச்சியான குக்கீகள் ஒவ்வொரு 14 மாதங்களுக்கும் காலாவதியாகும். IBM அதன் வலைத்தளங்களில் விற்பனையாளர்களால் வழங்கப்படும் குக்கீகளை அனுமதிக்கிறது. விற்பனையாளர்களால் வழங்கப்படும் குக்கீகளுக்கு, தொடர்ச்சியான குக்கீ தக்கவைப்பு காலங்கள் விற்பனையாளரின் தனியுரிமைக் கொள்கையால் உள்ளடக்கப்படும்.

நீங்கள் நாம் பயன்படுத்தும் இணையவழித் தடமறிதல் தொழில்நுட்பங்களைப் பற்றி மேலும் அறியவும், நாங்கள் எங்கள் வலைத்தளங்களில் உங்களைப் பற்றிச் சேகரிக்கும் தகவல்கள் தொடர்பான உங்கள் விருப்பங்களை மீளாய்வு செய்யவும் அல்லது அமைக்கவும் IBM நினைவி முகாமையாளரைப் பயன்படுத்தலாம். IBM நினைவி முகாமையாளர் நீங்கள் முதலில் ஒரு வலைப் பக்கத்தைப் பார்வையிடும் போது அல்லது வலைத்தளத்தின் அடியில் **நினைவி விருப்பங்களைத்** தெரிவு செய்து திறக்கும் போது முன்வைக்கப்படுகிறது. IBM நினைவி முகாமையாளர் எல்லா வகையான தடமறிதல் தொழில்நுட்பங்களையும் (எடுத்துக் காட்டாக மின்னஞ்சல் படப்புள்ளிகள்) கையாள்வதில்லை. கைப்பேசிச் செயலிகளைப் பயன்படுத்தும் போது, அமைப்புகளை முகாமை செய்ய உங்கள் கையடக்கச் சாதனத்திலுள்ள தெரிவுகளைப் பயன்படுத்துக.

IBM நினைவிகளைத் தடுப்பது, முடக்குவது அல்லது நிராகரிப்பது ஒரு பொருள் வாங்கல் கூடையுடன் தொடர்பாகப் போன்று சேவைகளைச் சரியாகத் தொழிற்படாதிருக்கச் செய்யலாம் அல்லது நீங்கள் நுழைவுப் பதிவு செய்ய வேண்டிய வலைத்தளங்களை அல்லது IBM Cloud சேவைகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கலாம். நினைவிகளை முடக்குவது ஏனைய இணையவழித் தடமறிதல் தொழில்நுட்பங்களை முடக்காது, ஆனால் மற்றத் தொழில்நுட்பங்கள் நினைவிகளிற் சேமிக்கப்பட்டுள்ள எவ்விபரத்தையும் அணுகுவதைத் தடுக்கிறது.

எங்கள் வலைத்தளங்கள் மூன்றாம் தரப்புச் சமூக ஊடகத் தெரிவுகளைப் பயன்படுத்தும் சாத்தியத்தை வழங்குகின்றன. நீங்கள் இத்தெரிவுகளைப் பயன்படுத்தத் தெரிவு செய்தால், இம்மூன்றாம் தரப்புத் தளங்கள் உமது IP முகவரி, அணுகல் நேரம், வலைத்தள உரலிகள் போன்ற உங்களைப் பற்றிய தகவல்களைப் பதிவு செய்யலாம். நீங்கள் அச்சமூக ஊடகத் தளங்களில் நுழைவுப் பதிவைந்திருந்தால், அவை சேகரிக்கப்பட்ட தகவல்களை உங்கள் சுயவிபரத் தகவல்களுடனும் இணைக்கலாம். நாம் இம்மூன்றாம் தரப்புச் சேவைகளின் தனியுரிமை நடைமுறைகளுக்குப் பொறுப்பேற்காததுடன் மேலும் தகவல்களுக்காக அவர்களது தனியுரிமைக் கொள்கைகளை மீளாய்வு செய்ய உங்களை ஊக்குவிக்கிறோம்.

நினைவிகளையும் உலவி அமைப்புகளைப் பயன்படுத்தி இத்தொழில்நுட்பங்களை அகற்றும் முறையையும் பற்றிய தகவல்களுக்காக https://www.allaboutcookies.org/ ஐப் பார்க்க.

### சிறுவர்கள்

வேறு விதமாக குறிப்பிடப்பட்டாலொழிய, எங்களது இணையதளங்கள், தயாரிப்புகள் மற்றும் சேவைகளானது குழந்தைகள் அல்லது தங்களது பகுதியில் சட்டத்தால் மைனர்கள் என்று குறிப்பிடப்பட்டவர்களால் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டவை அல்ல.

# தனிப்பட்ட தகவல்களைப் பகிர்தல்

நாங்கள் IBM இன் சட்டப்படியான வணிக நோக்கங்களுக்கான வழங்குநர்ககளுடன், ஆலோசகர்களுடன் அல்லது வணிகக் கூட்டாளிகளுடன், அத்துடன் ஓர் அறிய வேண்டிய அடிப்படையில் மாத்திரம் உங்கள் தனிப்பட்ட தகவல்களை அகத்திலும் புறத்திலும் பகிரக்கூடும். இப்பகுதி நாங்கள் தகவல்களைப் பகிரும் முறையையும் நாங்கள் அப்பகிர்வுக்கு வசதியளிக்கும் முறையையும் விவரிக்கிறது.

# நாம் தனிப்பட்ட தகவல்களைப் பகிரும் முறை

தனிப்பட்ட தகவல்களைப் பகிரும் போது, நாங்கள் தகவல்கள் பொருந்தக்கூடிய சட்டத்துக்கு அமைவாகப் பகிரப்படலாம் என்பதை உறுதி செய்யப் பொருத்தமான சோதனைகளையும் கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்துகிறோம்.

நாங்கள் சில நாடுகளில் வணிகங்களை விற்க, வாங்க, ஒன்றிணைக்க அல்லது மறுசீரமைக்க முடிவு செய்தால், அத்தகைய ஒரு கொடுக்கல் வாங்கலில் வருங்கால அல்லது உண்மையான வணிக வாங்குநவர்களுக்குச் சில தனிப்பட்ட தகவல்களை வெளியிடுவது அல்லது அத்தகைய வணிகங்களை விற்பவர்களிடமிருந்து தனிப்பட்ட தகவல்களைச் சேகரிப்பது அடங்கலாம்.

---

மேலும் அறிக

அகத்தில், செயற்றிறனை மேம்படுத்தவும் செலவுச் சேமிப்புக்காகவும் (Red Hat போன்ற) எங்கள் துணை நிறுவனங்களுக்கு இடையிலான ஒத்துழைப்புக்காகவுமென எங்கள் வணிக நோக்கங்களுக்காகத் தனிப்பட்ட தகவல்கள் பகிரப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, உம்முடனும் வேறு வெளித் தரப்புகளுடனுமான எங்கள் உறவை முகாமை செய்தல், கீழ்ப்படிவுத் திட்டங்கள் அல்லது தொகுதிகளினதும் வலையமைப்புகளினதும் பாதுகாப்பு போன்றவற்றில் நாங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பகிரலாம்.

தனிப்பட்ட தகவலுக்கான எங்கள் உள் அணுகல் மட்டுப்படுத்தப்படுவதுடன் ஓர் அறிய வேண்டிய அடிப்படையில் மட்டுமே வழங்கப்படுகிறது. இத்தகவல்களைப் பகிர்வது நிறுவனத்தினுள் பொருத்தமான ஏற்பாடுகள், எங்கள் கொள்கைகள், பாதுகாப்புத் தராதரங்கள் என்பவற்றுக்கு உட்பட்டது. மேலும் தகவல்களுக்காக, [சட்ட அடிப்படை](#) என்பதைப் பார்க்க.
வெளியில்,

- வழங்குநர்களுடனான எங்கள் வணிகத்தில் எங்கள் சார்பாகத் தனிப்பட்ட தகவல்களைச் சேகரிப்பது, பயன்படுத்துவது, பகுப்பாய்வு செய்வது அல்லது வேறு வகையான முறைப்படுத்தல் அடங்கலாம்.
- எங்கள் வணிக மாதிரி IBM தயாரிப்புகளினதும் சேவைகளினதும் சந்தைப்படுத்தல், விற்பனை செய்தல், ஏற்பாடு செய்தல் என்பவற்றுக்கான சுயாதீன வணிகக் கூட்டாளிகளுடனான ஒத்துழைப்பை உள்ளடக்கியது. பொருத்தமானவிடத்து (எடுத்துக் காட்டாக ஒரு வேண்டலை நிறைவேற்றத் தேவைப்படும் போது), நாங்கள் தெரிவு செய்யப்பட்ட வணிகக் கூட்டாளிகளுடன் வணிகத் தொடர்புத் தகவல்களைப் பகிர்கிறோம்.
- நாங்கள் சட்டத்தரணிகள், கணக்காய்வாளர்கள், வழக்கறிஞர்கள், காப்புறுதி நிறுவனங்கள் ஆகியோர் அடங்கலாகத் தொழின்முறை ஆலோசகர்களுடன் அவர்களின் சேவைகளைப் பெறத் தனிப்பட்ட தகவல்களைப் பகிரலாம்.
- நாங்கள் எங்கள் வணிகக் கூட்டாளிகள், நிதி நிறுவனங்கள், அனுப்பும் நிறுவனங்கள், அஞ்சல், அல்லது நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ள சுங்க அதிகாரிகள் போன்ற அரசாங்க அதிகாரிகள் போன்ற மற்றவர்களுடன் ஒப்பந்த உறவுத் தகவல்களைப் பகிரலாம்.
- நாங்கள் IBM ஆல் இலக்கு வைக்கப்படும் விளம்பரங்களை அவர்களின் தளமேடைகளில் வழங்கவும், பகுப்பாய்வுக்கான தகவல்களை

ஒருங்கிணைக்கவும், அவ்விளம்பரங்களுடனான ஈடுபாட்டைத் தடமறியவும் IBM இனால் ஈடுபடுத்தப்படும் விளம்பரத் தொழில்நுட்பக் கூட்டாளிகள், தரவுப் பகுப்பாய்வு வழங்குநர்கள், சமூக வலையமைப்புகள் போன்ற மூன்றாம் தரப்புகளுடன் தனிப்பட்ட தகவல்களைப் பகிரலாம்.

சிற்சில சூழ்நிலைகளில், தனிப்பட்ட தகவல்கள் நீதித்துறை நடவடிக்கைகளுக்கு, நீதிமன்ற உத்தரவுகளுக்கு அல்லது சட்ட நடவடிக்கைகளுக்கு அல்லது அரசாங்க நிறுவனங்களுக்கு வெளிப்படுத்தப்படுவது நிகழலாம். நாங்கள் மோசடியைத் தடுப்பது போன்று, அத்தகைய உரிமைகள் பாதிக்கப்படலாம் என IBM நம்பும்போது, IBM இன் அல்லது மற்றவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கத் தனிப்பட்ட தகவல்களை வெளியிடலாம்.

## சர்வதேச அனுப்புதல்களுக்கு வசதியளித்தல்

உங்கள் தனிப்பட்ட தகவல்கள் உலகளவில் IBM துணை நிறுவனங்களாலும் மூன்றாம் தரப்பினராலும் அனுப்பப்படலாம் அல்லது அணுகப்படலாம். IBM உங்கள் தனிப்பட்ட தகவல்களை எங்கிருந்தாலும் பாதுகாக்க நாடுகளுக்கிடையே தனிப்பட்ட தகவல்களை அனுப்புவது தொடர்பான சட்டங்களுக்குக் கீழ்ப்படிகிறது.

நாங்கள் பின்வருவன உட்படப் பல்வேறு பாதுகாப்புகளை நடைமுறைப்படுத்தியுள்ளோம்:

- ஐரோப்பிய ஒன்றிய ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டவையும் வேறு பல நாடுகளில் ஏற்கப்பட்டவையும் போன்ற ஒப்பந்த விதிகள்.
- தரவு தனியுரிமைச் சட்டகச் சான்றளிப்பு. பொருத்தமானவிடத்து, சிற்சில குறிப்பான IBM சேவைகள் (எடுத்துக் காட்டாக IBM ஒரு சேவையாக உட்கட்டமைப்பு, ஒரு சேவையாகத் தளமேடை, ஒரு சேவையாக மென்பொருள், தெரிவு செய்யப்பட்ட ஏனைய ஓம்பப்படும் சலுகைகள்) தரவு தனியுரிமைச் சட்டகத்துக்குக் கீழ்ப்படிவதாகச் சான்றளிக்கப்படுகின்றன. மேலும் தகவல்களுக்காக, சான்றளிக்கப்பட்ட IBM கிளவுட்சேவைகளுக்கான IBM தரவு தனியுரிமைச் சட்டகக் கொள்கை என்பதைப் பார்க்க.
- கட்டுப்பாட்டாளர்களுக்கான கட்டுப்படுத்தும் நிறுவன விதிகள் (IBM BCR-C). எங்களடம் ஐரோப்பியத் தரவுப் பாதுகாப்பு அதிகார சபையினாலும் UK தகவல் ஆணையாளர் அலுவலகத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட BCR-C உள்ளது. மேலும் தகவல்களுக்காக, IBM

கட்டுப்பாட்டாளர் கட்டுப்படுத்தும் நிறுவன விதிகள் என்பதைப் பார்க்க.
- இத்தனியுரிமை அறிக்கையில் விவரிக்கப்படும் IBM இன் தனியுரிமை நடைமுறைகள் APEC எல்லை கடந்த தனியுரிமைவிதிச் சட்டகத்துக்குக் கீழ்ப்படிகின்றன. APECஎல்லை கடந்த அந்தரங்க விதிகள் (CBPR) தொகுதி ibm.com இனூடாகச் சேகரிக்கப்படும் இணையவழித் தகவல்களுடன் தொடர்பானது என்பதாற் பங்குபற்றும் APEC பொருளாதாரங்களுக்கு இடையே அனுப்பப்படும் தனிப்பட்ட தகவல்களுக்குப் பாதுகாப்பு வழங்குகிறது.

---

## கட்டுப்பாட்டாளர் தகவல்களும் பிரதிநிதித் தகவல்களும்

IBM உலகளவில் அதன் துணை நிறுவனங்களின் மூலம் வணிகம் செய்கிறது. சில நாடுகளிலுள்ள தனியுரிமைச் சட்டங்கள் தனிப்பட்ட தகவல்களின் முறைப்படுத்தல் நடைபெறும் நோக்கங்களையும் அத்தகவல்கள் முறைப்படுத்தப்படும் முறையையும் விவரிக்கும் சட்ட நிறுவனமாக (அல்லது இயற்கை ஆளாக) ஒரு கட்டுப்பாட்டாளர் கருதப்படுகிறார். ஒரு கட்டுப்பாட்டாளரின் சார்பாக முறைப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் தரப்புகள் முறைப்படுத்துவோரெனக் குறிக்கப்படலாம். அதிகார எல்லையைப் பொறுத்துப் பதவிகளும் தொடர்புடைய கடமைகளும் வேறுபடுகின்றன.

இது உங்கள் நாட்டிலுள்ள தனியுரிமைச் சட்டங்களுக்குப் பொருத்தமானதாக இருந்தால், International Business Machines Corporation (IBM Corp) அன்றி, உங்கள் தனிப்பட்ட தகவல்களின் கட்டுப்பாட்டாளர் உங்கள் நாட்டில் அல்லது பிராந்தியத்திலுள்ள IBM இன் முக்கிய துணை நிறுவனமாகும் அல்லது மற்றொரு IBM துணை நிறுவனம் உங்கலிடம் ஒரு குறிப்பிட்ட ஊடாட்டத்துக்கான கட்டுப்பாட்டாளராகத் தன்னை அடையாளப்படுத்தலாம்.

IBM கார்ப்பரேஷன் அல்லது எங்களின் தலைமை தனியுரிமை மற்றும் பொறுப்புத் தொழில்நுட்ப அதிகாரியின் தொடர்பு விவரங்கள்:

International Business Machines Corporation,
1, North Castle Drive,
Armonk,
New York,
United States of America.

ஒரு நாடு அல்லது வட்டாரத்தின் முதன்மைத் துணை நிறுவனத்தின் தொடர்பு விவரங்களை இங்கே காணலாம்.

IBM Corp. அல்லது அது கட்டுப்படுத்தும் ஒரு துணை நிறுவனம் ஒரு சட்டப் பிரதிநிதியை நியமிக்க வேண்டப்படுமிடத்து, பின்வரும் பிரதிநிதிகள் நியமிக்கப்படுகின்றனர்.

European Economic Area (EEA)

IBM International Group B.V.,
Johan Huizingalaan 765,
1066 VH Amsterdam,
The Netherlands

United Kingdom (UK)

IBM United Kingdom Limited,
PO Box 41, North Harbour,
Portsmouth,
Hampshire, PO6 3AU,
United Kingdom

# தகவல் பாதுகாப்பும் வைத்திருத்தலும்

அங்கீகரிக்கப்படாத அணுகல், பயன்பாடு, வெளிப்படுத்தல் என்பவற்றை விட்டும் உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாக்க, நாம் நியாயமான பௌதிக, நிர்வாக, தொழில்நுட்பப் பாதுகாப்புகளை நடைமுறைப்படுத்துகிறோம். இப்பாதுகாப்புகளில் பாத்திர அடிப்படையிலான அணுகல் கட்டுப்பாடுகளும் போக்குவரத்தில் இருக்கும் போது தனிப்பட்ட தகவல்களைத் தனிப்பட வைத்திருக்கும் குறியாக்கமும் அடங்குகின்றன. நாங்கள் அங்கீகரிக்கப்படாத அணுகல், பயன்பாடு, வெளிப்படுத்தல் ஆகியவற்றை விட்டும் தகவல்களைப் பாதுகாக்க, ஒப்பந்த விதிமுறைகளும் அணுகல் கட்டுப்பாடுகளும் போன்ற பொருத்தமான பாதுகாப்புகளைச் செயற்படுத்த எமது வணிகக் கூட்டாளிகள், வழங்குநர்கள், மூன்றாம் தரப்பினர் ஆகியோரிடமும் கோருகிறோம்.

IBM நிறுவனமானது (பெரும்பாலும் LLM–கள் என அழைக்கப்படும்) பெரிய மொழி மாதிரிகள் உள்ளிட்ட செயற்கை நுண்ணறிவு மாதிரிகள் மற்றும் அமைப்புகளைக் கிடைக்கச் செய்கின்றது. அத்தகைய மாதிரிகள் மற்றும் அமைப்புகளை, IBM நிறுவனமானது, சாட்பாட்கள் மூலம் உட்பட, IBM.com உடமைகளின் மீது பயன்படுத்தலாம் அல்லது அவற்றின் உள் வைக்கலாம். அத்தகைய AI மாதிரிகள் மற்றும் அமைப்புகளைத் தனியான விதிமுறைகளின் கீழும் IBM கிடைக்கச் செய்யலாம்.

IBM-இன் AI மாதிரிகள் மற்றும் அமைப்புகளானது, பொதுவெளியில் கிடைக்கும் ஆதாரங்களின் மீது வடிவமைக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டு, சரிபார்க்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டவை ஆகும், அத்தகையத் தரவுகளானது, தற்செயலாகத் தனிப்பட்டத் தகவல்களைக் கொண்டிருக்கலாம். தொடர்புடைய தாக்கங்களைக் குறைக்கவும், நம்பிக்கைக்குரிய AI-ஐ பொறுப்பாக உருவாக்குவது மற்றும் செயல்படுத்துவதில் உதவுவதற்கும் நாங்கள் பாதுகாப்பு முறைகள், செயல்முறைகள் மற்றும் கருவிகளை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

நாங்கள் தனிப்பட்ட தகவல்களைச் செயலாக்கும் நோக்கங்களை நிறைவேற்ற அல்லது சட்ட, ஒழுங்குமுறைத் தக்க வைப்புத் தேவைகளுக்குக் கீழ்ப்படியத் தேவையான வரை மட்டுமே வைத்திருக்கிறோம். சட்ட, ஒழுங்குமுறைத் தக்க வைப்புத் தேவைகளில் இவற்றுக்காகத் தகவல்களைத் தக்க வைப்பது அடங்கலாம்:

– கணக்காய்வு, கணக்கியல் நோக்கங்கள்,
– சட்டமுறைத் தக்க வைப்பு விதிமுறைகள்,

- சர்ச்சைகளைக் கையாளல்,
- நாங்கள் வணிகம் செய்யும் நாடுகளில் சட்ட உரிமை கோரல்களை நிறுவுதல், செயற்படுத்துதல் அல்லது தற்காத்தல்.

நாங்கள் நிர்வாக நோக்கங்களுக்காகவும், சட்ட, ஒழுங்குமுறைத் தக்கவைப்புத் தேவைப்பாடுகளுக்காகவும், IBM உரிமைகளைத் தற்காக்கவும், உங்களுடனான IBM உறவை முகாமை செய்யவும் எந்தவொரு ஒப்பந்தத் தொடர்புத் தகவலையும் தக்க வைக்கிறோம். ஒரு துணை தனியுரிமை அறிவிப்பில் வழங்கப்படும் தகவல்கள் பொருந்தக்கூடிய தக்க வைப்பு விதிமுறைகளைப் பற்றிய விரிவான தகவல்களை வழங்கக்கூடும்.

தனிப்பட்ட தகவல்கள் அதற்கு மேலும் தேவைப்படாத போது, அதைப் பாதுகாப்பாக நீக்க, எடுத்துக் காட்டாக மின்கோப்புகளை அழிக்கவும் பௌதிகப் பதிவுகளைத் துண்டாடவும் எம்மிடம் செயன்முறைகள் இருக்கின்றன.

---

# உங்கள் உரிமைகள்

உங்கள் தனிப்பட்ட தகவல்களைக் கையாளுவது பொறுத்தவரை உங்களுக்கு குறிப்பிட்ட சில உரிமைகள் இருக்கலாம்.

எங்களைத் தொடர்புகொள்ளவும் என்ற படிவத்தை இதற்கு பயன்படுத்தப்படலாம்:

- இத்தனியுரிமை அறிக்கையும் தனியுரிமை நடைமுறைகளும் தொடர்பாகக் கேள்வி கேட்டல். உங்கள் செய்தி பொறுப்பான தரவுப் பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட IBM இன் தரவு தனியுரிமைக் குழுவின் பொருத்தமான உறுப்பினருக்கு அனுப்பப்படுகிறது.
- IBM உங்கள் தனிப்பட்ட தகவல்களை முறைப்படுத்தும் விதம் தொடர்பில் நீங்கள்ர் உள நிறைவுறாவிடின், IBM இற்கு ஒரு முறைப்பாட்டுச் சமர்ப்பிக்க.

தரவு உரிமைகள் கோரிக்கைப் படிவத்தைச் சமர்ப்பிக்கவும் என்பதை இதற்கு பயன்படுத்தப்படலாம்:

- எங்களிடடம் உங்களைப் பற்றியுள்ள தனிப்பட்ட தகவல்களுக்கான அணுகலை அல்லது அதை புதுப்பிக்கவும் அல்லது திருத்தக் கோருதல். பொருந்தக்கூடிய சட்டத்தைப் பொறுத்து, உங்கள் தனிப்பட்ட தகவல்கள் தொடர்பில் உங்களுக்கு மேலதிக உரிமைகள் இருக்கலாம்.
- உங்கள் தனிப்பட்ட தகவல்களை ஒரு பயன்படுத்தக்கூடிய வடிவத்தில் பெற்று அதை வேறொரு தரப்புக்கு அனுப்பக் கோருதலை (இது தரவுப் பெயர்வுத் உரிமை என்றும் அழைக்கப்படுகிறது);
- நாங்கள் உங்கலைப் பற்றி வைத்திருக்கும் தனிப்பட்ட தகவல்களை நீக்கக் கோருதல்;
- இலக்கு வைக்கப்பட்ட விளம்பரம் போன்ற குறிப்பான தனிப்பட்ட தகவல் முறைப்படுத்தலை விட்டு விலகுதல்

---

தரவு உரிமைக் கோரிக்கை விவரங்கள்

நீங்கள் ஒரு தரவு உரிமைக் (DR) கோரிக்கையைச் சமர்ப்பிக்கும் போது, நீங்கள் எங்களுக்கு உங்கள் பெயரும் தொடர்பு விவரங்களும் உட்படத் தனிப்பட்ட தகவல்களை வழங்குகிறீர், நாங்கள் உங்கள் கோரிக்கைக்குப் பதிலளிக்க அவற்றைப் பயன்படுத்துகிறோம். சில சூழ்நிலைகளில், உமது ஆளடையாளத்தைச் சரிபார்க்கவும் தனிப்பட்ட தகவல்களைச் சரியான ஆளுக்கு வெளிப்படுத்துவதை உறுதி செய்யவுமென நாங்கள் உங்கள் ஒளிப்பட அடையாள அட்டையின் ஒரு பிரதியையும் கோரலாம், அது உங்கள் ஆளடையாளத்தைச் சரிபார்த்த பின்னர் உடனடியாக நீக்கப்படும்.

உங்கள் DR கோரிக்கையின் பேரில், IBM இன் சட்டக் கடப்பாடுகளுக்கும் DRகள் தொடர்பான அர்ப்பணிப்புகளுக்கும் அமைவாக, உமது DR கோரிக்கையைக் கையாளவும் நிறைவேற்றவும் உங்கள் தனிப்பட்ட தகவல்கள் முறைப்படுத்தப்படும்.

நீங்கள் சமர்ப்பித்துள்ள கோரிக்கைகளின் நிலையை, கோரிக்கை முடிக்கப்பட்ட பின் 90 நாள்களுக்கு IBM டிரஸ்ட் மையத்தில் உள்ள DR

இணையவழிப் படிவத்தைப் பயன்படுத்திச் சரிபார்த்துக் கொள்ளலாம். உங்கள் DR கோரிக்கையுடன் தொடர்பான தரவுகள் நீங்கள் அது தொடர்பாகக் கொண்டுள்ள எக்கோரிக்கையையும் நிவர்த்தி செய்யவும் IBM இன் கீழ்ப்படிவு, பதிவு செய்தல் நோக்கங்களுக்காக, IBM உடனான உங்கள் கடைசி DR தொடர்பான தொடர்பாடல் தேதிதியிலிருந்து குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்குத் தக்க வைக்கப்படும்.

நாங்கள் உங்கள் தரவுகளை முறைப்படுத்தும் விதத்தைப் பற்றி மேலும் தகவல்களுக்காக, [நாங்கள் சேகரித்துப் பயன்படுத்தும் தனிப்பட்ட தகவல்கள்] என்பதைப் பார்க்க.

உங்கள் உரிமைகள் பொருந்தக்கூடிய சட்டங்களின் விளைவாக வரம்புகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் ஆட்படலாம். எடுத்துக் காட்டாக, அதை வெளிப்படுத்துவது என்பது மற்றவர்களைப் பற்றிய தகவல்களை வெளிப்படுத்துவதாகக் கூடியவாறு, நீங்கள் தேடும் சில தகவல்களை நாங்கள் பகிர முடியாத நிலைமைகள் இருக்கலாம்.

உங்களுக்கு தகுதி வாய்ந்த மேற்பார்வை அதிகாரியிடம் முறையிடவும் உரிமை இருக்கலாம். மேலதிக உரிமைகள், அவை பொருந்தும் நிலைமை, தகுதி வாய்ந்த மேற்பார்வை அதிகாரியிடம் முறையிடுவதற்கான உரிமை என்பவற்றைப் பற்றிய தகவல்களை [இங்கே] காணலாம்.

உங்களுக்கு நாங்கள் உள நிறைவாகத் தீர்க்கவில்லை எனும் தீர்க்கப்படாத ஓர் தனியுரிமைஅல்லது தரவுப் பயன்பாட்டுக் கவலை இருந்தால், எங்கள் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மூன்றாம் தரப்பு சர்ச்சைத் தீர்வு வழங்குநரை [இங்கே] தொடர்பு கொள்க (கட்டணமில்லை).

உங்களுக்கு சந்தைப்படுத்தல் தொடர்பாடல் விருப்பங்களை அமைக்க அல்லது புதுப்பிக்க, [IBM Privacy Preference Center-க்கு] வருகை தருக. நீங்கள் ஒவ்வொரு சந்தைப்படுத்தல் மின்னஞ்சலினதும் கீழே ஒரு [விலகல்] கோரிக்கையைச் சமர்ப்பிக்கவும் அல்லது சந்தா நீங்கத் தெரிவு செய்யவும் செய்யலாம்.

# சட்ட அடிப்படை

உங்கள் உரிமைகள் பொருந்தக்கூடிய சட்டங்களின் விளைவாக வரம்புகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் ஆட்படலாம். எடுத்துக் காட்டாக, அதை வெளிப்படுத்துவது என்பது மற்றவர்களைப் பற்றிய தகவல்களை வெளிப்படுத்துவதாகக் கூடியவாறு, நீங்கள் தேடும் சில தகவல்களை நாங்கள் பகிர முடியாத நிலைமைகள் இருக்கலாம்.

உங்களுக்கு தகுதி வாய்ந்த மேற்பார்வை அதிகாரியிடம் முறையிடவும் உரிமை இருக்கலாம். மேலதிக உரிமைகள், அவை பொருந்தும் நிலைமை, தகுதி வாய்ந்த மேற்பார்வை அதிகாரியிடம் முறையிடுவதற்கான உரிமை என்பவற்றைப் பற்றிய தகவல்களை இங்கேகாணலாம்.

உங்களுக்கு நாங்கள் உள நிறைவாகத் தீர்க்கவில்லை எனும் தீர்க்கப்படாத ஓர் தனியுரிமைஅல்லது தரவுப் பயன்பாட்டுக் கவலை இருந்தால், எங்கள் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட மூன்றாம் தரப்பு சர்ச்சைத் தீர்வு வழங்குநரை இங்கே தொடர்பு கொள்க (கட்டணமில்லை).

தனிப்பட்ட தகவல்களைப் பகிர்தல்

உங்களுக்கு சந்தைப்படுத்தல் தொடர்பாடல் விருப்பங்களை அமைக்க அல்லது புதுப்பிக்க IBM Privacy Preference Center-க்கு வருகை தருக. நீங்கள் ஒவ்வொரு சந்தைப்படுத்தல் மின்னஞ்சலினதும் கீழே ஒரு விலகல் கோரிக்கையைச் சமர்ப்பிக்கவும் அல்லது சந்தா நீங்கத் தெரிவு செய்யவும் செய்யலாம்.

உங்கள் உரிமைகள்

சில அதிகார வரம்புகளில், தனிப்பட்ட தகவல்களைச் சட்டபபடி கையாள்வது ஒரு நியாயத்துக்கு உட்பட்டது, அது சில நேரங்களில் சட்ட அடிப்படை என்று குறிப்பிடப்படுகிறது. நாங்கள் உங்கள் தனிப்பட்ட தகவல்களைச் சட்டப்படி கையாள நம்பியிருக்கும் சட்ட அடிப்படைகள் நோக்கத்தையும் பொருந்தும் சட்டத்தையும் பொறுத்து மாறுபடுகின்றன.

நாங்கள் பயன்படுத்தக்கூடிய வெவ்வேறு சட்ட அடிப்படைகளாவன:

---

உங்களுடன் ஓர் ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தேவை

நாங்கள் உங்கள் தொடர்பு விவரங்கள், கட்டண விபரங்கள், அனுப்புதல் விவரங்கள் என்பன போன்ற சிற்சில தனிப்பட்ட தகவல்களைச் செயற்படுத்த வேண்டியிருக்கும் போது, எங்கள் கடமைகளைச்

செய்ய அல்லது உங்களுடனான எங்கள் ஒப்பந்த உறவை முகாமை செய்ய இச்சட்ட அடிப்படையில் தங்கியிருக்கிறோம்.

எடுத்துக் காட்டுகள்:

- நீங்கள் ஒரு தயாரிப்பை அல்லது சேவையை வாங்க விரும்பினால், நாங்கள் உங்களுடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்ய உங்கள் வணிகத் தொடர்புத் தகவல்களைத் தேவைப்படுத்தலாம் அல்லது வாங்கிய ஒரு தயாரிப்பை இணையவழியில் அணுக நீங்கள் ஒரு IBMid ஐ உருவாக்க வேண்டியிருக்கலாம் ( பார்க்கஉமது சுயவிபரம்).
- ஒரு தொடர்பை நிறைவேற்றும் போது, நீங்கள் ஆதரவுச் சேவைகளைப் பெற வேண்டியிருக்கலாம், அதற்காக நாங்கள் உங்கள் தொடர்புத் தகவல்களைச் சேகரிக்க வேண்டியிருக்கும்.
- வேலை விண்ணப்பதாரிகளைக் கருத்தில் கொள்ள அல்லது ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதிய உரிமைகளை முகாமை செய்ய எங்களுக்குத் தனிப்பட்ட தகவல்கள் தேவை (ஆட்சேர்ப்பும் முன்னாள் பணியாளர்களும் என்பதைப் பார்க்க).

IBM இன் அல்லது ஒரு மூன்றாம் தரப்பினரின் நியாயமான நலனின் நோக்கங்களுக்காகத் தேவை.

சட்டப்பூர்வமான நலன்கள் வணிகத்தை நடத்துவதும் ஒழுங்கமைப்பதுடன் தொடர்புடையவையாகும், இவற்றில் எங்கள் சலுகைகளைச் சந்தைப்படுத்துதல், எங்கள் சட்ட நலன்களைப் பாதுகாத்தல், எங்கள் தகவல் தொழில்நுட்பச் சூழலைப் பாதுகாத்தல் அல்லது வாடிக்கையாளர் தேவைகளை நிறைவேற்றுதல் என்பன அடங்கும்.
எடுத்துக் காட்டுகள்:

- நீங்கள்எங்கள் வலைத்தளங்களைப் பயன்படுத்துவதையும் அவற்றுடனான ஊடாட்டத்தையும் அவற்றை மேம்படுத்தப் பதிவு செய்கிறோம்.
- எங்கள் சேவைகளின் அணுகல் அங்கீகாரத்தை முகாமை செய்ய நாம் உங்கள் IBMid ஐ முறைப்படுத்துகிறோம் (உங்கள் கணக்கு என்பதைப் பார்க்க).

- நீங்கள் வேலை செய்யும் நிறுவனத்துடன் எங்களுக்கு ஓர் ஒப்பந்த உறவு இருக்குமிடத்து, இவ்வொப்பந்தத்தை முகாமை செய்யப் பயன்படுத்தப்படும் உங்கள் தனிப்பட்ட தகவல்களை முறைப்படுத்த எங்களுக்கு ஒரு சட்டமுறையான ஆர்வம் இருக்கிறது.
- உங்களுடன் எங்கள் ஊடாட்டங்களை மேற்கொள்ளவும் எங்கள் தயாரிப்புகளையும் சேவைகளையும் மேம்படுத்தவும் வணிகம் தொடர்பான வேறு தகவல்களுடன் இணைத்து நாங்கள் உங்கள் வணிகத் தொடர்புத் தகவல்களை முறைப்படுத்துகிறோம் ( உங்கள் கணக்குஎன்பதைப் பார்க்க). நாங்கள் சந்தைப்படுத்தல் வணிக நுண்ணறிவு என்பவற்றை விருத்தி செய்ய நீங்கள் சமுகமளித்த ஒரு IBM நிகழ்வின் விவரங்களுடன் சேர்த்து உங்கள் தொடர்புத் தகவல்களை முறைப்படுத்தலாம்.
- தகுந்த திறமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான எங்கள் நியாயமான ஆர்வத்தின் அடிப்படையில் நாங்கள் விண்ணப்பதாரிகளின் தனிப்பட்ட தகவல்களை முறைப்படுத்துகிறோம் (ஆட்சேர்ப்பும் முன்னாள் பணியாளர்களும்என்பதைப் பார்க்க).
- நாங்கள் எங்கள் பொதுவான வணிக நடவடிக்கைகளைத் தொழிற்படுவனவாக வைத்திருக்க வேண்டும். இதைச் செய்வதற்காக, எடுத்துக் காட்டாக, எமது தகவல் தொழில்நுட்பத் தொகுதிகளினதும் வலையமைப்புகளினதும் நுழைவுப் பதிவுத் தகவல்களை, அல்லது பாதுகாப்பு, காப்பளிப்பு நோக்கங்களுக்காக IBM அமைவிடங்களில் CCTV காட்சிகளை நாங்கள் முறைப்படுத்தலாம்.

நாங்கள் எங்கள் நீதித்துறை, நிர்வாக அல்லது தீர்ப்பாய நடவடிக்கைகளில் எங்கள் உரிமைகளைத் தற்காக்கத் தேவையான தனிப்பட்ட தகவல்களையும் முறைப்படுத்தலாம். இது அவை ஒரு வேறான சட்ட அடிப்படையாக இல்லாத நாடுகளிலும் நியாயமான ஆர்வத்தின் சட்ட அடிப்படையின் கீழ் வருகிறது.

இசைவு.

முறைப்படுத்துதல் நாங்கள் அதைக் கோருமிடத்தில் உங்கள் இசைவின் அடிப்படையில் நிகழ்கிறது. எடுத்துக் காட்டு:

நா[illegible]காகத் தனிப்பட்ட தக[illegible]சிலிய சட்ட[illegible]பான சட்ட அடிப்படையாகும், ஆனால் மற்ற நாடுகளிலும் நியாயமான ஆர்வத்தின் சட்ட அடிப்படையின் கீழ் உள்ளடங்குகிறது.

சட்டக் கடப்பாடு

எங்கள் சட்டக் கடப்பாட்டின் அடிப்படையில் நாங்கள் சில தனிப்பட்ட தகவல்களை முறைப்படுத்த வேண்டியிருக்குமிடத்து. எடுத்துக் காட்டு:

- நாங்கள் ஒரு பணக் கொடுக்கல் வாங்கல் போன்ற சிற்சில கொடுக்கல் வாங்கல்களுக்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஓர் அடையாள அட்டையைக் கேட்கக் கடமைப்படலாம் (ஒப்பந்த உறவுகள்என்பதைப் பார்க்க).

# தனியுரிமை அறிவிப்புப் புதுப்பிப்புகள்

இத்தனியுரிமை அறிக்கைக்கு ஒரு முக்கிய மாற்றம் செய்யப்பட்டால், நடைமுறைக்கு வரும் தேதி திருத்தப்பட்டு, 30 நாட்களுக்கு புதுப்பிக்கப்பட்ட தனியுரிமை அறிக்கையின் ஓர் அறிவிப்பு வெளியிடப்படும். ஒரு திருத்தம் நடைமுறைக்கு வந்த பிறகு, எங்கள் வலைத்தளங்களையும் சேவைகளையும் தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம், பயனர்கள் மாற்றங்களை வாசித்து விளங்கிக் கொண்டதாகக் கருதப்படுகிறது.

தனியுரிமை அறிக்கையின் முன்னைய வாசகங்கள் இங்கே கிடைக்கப் பெறுகின்றன.

**இந்த வெளியீட்டில் புதுப்பிக்கப்பட்ட பிரிவுகளாவன:**

1. Your Additional Rights: Brazil
2. Your Additional Rights: Israel

3. Your Additional Rights: US States

IBM தனியுரிமை அறிக்கையை இந்த மொழியில் துல்லியமாக மொழிபெயர்க்க எங்களால் இயன்ற முயற்சியை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். ஏதேனும் மொழிபெயர்ப்புப் பிரச்சனைகளைப் பற்றிப் புகாரளிக்க, இந்தப் பக்கத்தின் தலைப்புப் பகுதியில் உள்ள எங்களைத் தொடர்புகொள்ளவும் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

## வேறு தொடுப்புகள்


- உங்கள் மேலதிக உரிமைகள் →
- தரவு உரிமைகள் கோரிக்கைப் படிவத்தைச் சமர்ப்பிக்கவும் →
- கலிபோர்னியா கூடுதல் தனியுரிமை அறிக்கை →
- சான்றளிக்கப்பட்ட IBM கிளவுட் சேவைகளுக்கான IBM தரவு →
- IBM கட்டுப்பாட்டாளரைக் கட்டுப்படுத்தும் நிறுவன விதிகள் →
- IBM அறக்கட்டளை மையம் →

TRUSTe
Certified Privacy
Powered by TrustArc

TRUSTe
APEC Privacy
Powered by TrustArc